**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.**
**முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர், சீர்காழி.**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.266/2024
CNR.NO.TNMY08-005337-2024

| | |
|---|---|
| குற்றமுறையீட்டாளர் : | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br>குற்ற எண்.234/2023 |
| /எதிராக/ | |
| குற்றம்சாட்டப்பட்டவர்: | 1. ராதாகிருஷ்ணன், 60/2023, த/பெ. துரைசாமி<br>2. ராஜ்குமார், 33/2023, ராதாகிருஷ்ணன்<br>3.ரமேஷ், 43/2023, த/பெ. துரைசாமி<br>4. காசிநாதன், 50/2023, த/பெ. துரைசாமி<br>மேலே கண்ட நால்வரும் தெற்கு பண்டாரவாடை, கொண்டத்தூர், சீர்காழி. |
| குற்றச்சாட்டு | இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 294(b), 324, 506(ii ) |
| குற்றம் நிகழ்ந்த நாள் | 23.10.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 24.10.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | -- |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறையின் Crlmp.No.2113/2023, 07.11.2023 தேதியிட்ட உத்தரவுப்படி முன் பிணை பெற்று, 09.11.2023ல் இந்நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். |
| கு.வி.மு.ச.பிரிவு 281-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | 21.11.2025 |
| விசாரணை தொடங்கிய நாள் | 10.02.2026 |
| விசாரணை முடிவடைந்த நாள் | 27.03.2026 |
| BNSS 359-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம் | -- |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | 10.02.2026 | 10.02.2026 |
| அரசு தரப்பு சாட்சி.2 | 10.02.2026 | 10.02.2026 |
| அரசு தரப்பு சாட்சி.3 | 25.02.2026 | 25.02.2026 |



KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:25:59 +0530

| | |
|---|---|
| கு.வி.மு.ச.பிரிவு 313(1)(பி)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 04.03.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விபரம் | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம் | இல்லை |
| வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் | போலிசார் எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. |
| தீர்மானம் | எதிரிகள் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii ) ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானம் |
| முடிவு | முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக 1ம் எதிரியின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 294(b) ன் கீழும், 2,3 எதிரிகளின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும், 4 ஆம் எதிரியின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 23.11.2024ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 10.02.2026 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, குற்ற முறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. வெங்கடேசன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

1. இவ்வழக்கானது, புகார்தாரரும்/சாட்சி–1ம் ஆன கலியமூர்த்தி என்பவர் அவரது வயலில் 1ம் எதிரி ராதாகிருஷ்ணனின் வீட்டு ஆடுகள் மேய்ந்தது சம்மந்தமாக அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் அடிப்படையிலான முன்விரோதத்தை மனதில் கொண்டு கடந்த 23.10.2023ம்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:26:06 +0530

தேதி இரவு 21.00 மணியளவில் சாட்சி–1 கலியமூர்த்தி அவரது வீட்டில் இருந்தபோது அங்கு வந்த நான்கு எதிரிகளும் அவரை பார்த்து தரக்குறைவான வார்த்தைகளால் 'குச்சிக்காரி மகனே நீ என்ன பெரிய ஆளா?' என்று திட்டி, 2ம் எதிரி அவர் கையில் வைத்திருந்த அருவாளால் சாட்சி–1ன் வலது கை கட்டை விரலில் வெட்டி, 3 மற்றும் 4ம் எதிரிகள் அவரவர் கைகளில் வைத்திருந்த அருவாள் மற்றும் கட்டையை புகார்தாரரிடம் காட்டி 'கொலை செய்து விடுவோம்' என்று சொல்லி கொலைமிரட்டல் விடுத்து சம்பந்தமாக, மேற்படி 1ம் எதிரியின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 294(b) ன் கீழும், 2,3 எதிரிகளின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும், 4ம் எதிரியின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324ன் கீழும் தண்டிக்கத்தக்கது என்று கருதி வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 173(2)ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்கு ஆகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 23.11.2024ம் தேதி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் 24.10.2025ம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. 21.11.2025 ம் தேதி 1ம் எதிரியின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 294(b) ன் கீழும், 2,3 எதிரிகளின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும், 4எதிரியின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324ன் கீழ் குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரிகளிடம் விளக்கி கேட்டபோது, எதிரிகள் 'பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும்' கூறினார்கள். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 முதல் 3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அரசு தரப்பு சான்றாவணம் 1 முதல் 6 குறியீடு செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. பட்டியல் சாட்சிகள் 1,3, 5 முதல் 8 வரையிலானவர்களை உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:26:14 +0530

4. இவ்வழக்கில் கடந்த 04.03.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து, அவற்றை கேள்விகளாக தொகுத்து குற்ற விசாரணை முறை சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரிகள் அதனை மறுத்து 'பொய் சாட்சி, பொய் வழக்கு' என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சி இல்லை என்றும் கூறினார்கள். ஆகவே, எதிரிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5. அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.3ன் சாட்சியத்தின் மூலமாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணம். 1முதல் 6 ஆவணங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு வழக்கை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

6. இவ்வழக்கின் புகார்தாரர் விசாரிக்கப்படவில்லை என்றும், இதர சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சி.3ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளைவழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமாறும் வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனைகள்

i) இவ்வழக்கில் எதிரிகள் மீதான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

8. **தீர்வு:–**

8.1) இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என பரிசீலித்து பார்க்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரர் தனது புகார் வாக்குமூலத்தில் கடந்த 23.10.2023ம் தேதி இரவு சுமார் 09.00 மணியளவில் தான் தனது வீட்டில் இருந்தபோது எதிரிகள் அனைவரும் அங்கு வந்து தன்னை தகாத வார்த்தைகளால் திட்டி, அருவாள், கட்டை ஆகியவற்றால் தாக்கி, கொலைமிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டுள்ளபோதிலும், அரசுதரப்பில் அவர் ஒரு சாட்சியாக நீதிமன்றத்திற்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்படவில்லை ஏனெனில் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போதே புகார்தாரர் கடந்த 04.11.2025 ஆம் தேதியன்று இறந்துவிட்டார்.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:26:20 +0530

8.2) இவ்வழக்கு குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அசா.1 தனது முதல் விசாரணையில் இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

8.3) பார்வைமகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 தனது முதல் விசாரணையில், பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் தன்னுடையது எதுவும் இல்லை என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

8.4) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பாக சாட்சியமளித்த வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலையத்தின் தற்போதைய உதவி ஆய்வாளரான அசா.4 தனது முதல் விசாரணையில், கடந்த 24.10.2023ம் தேதி சீர்காழி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கலியமூர்த்தி என்பவரை சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசுப்ரமணியன் என்பவர் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றது பற்றியும், பிறகு வைத்தீஸ்வரன்கோயில் காவல்நிலைய குற்ற எண் 234/2023, இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை தான் பதிவு செய்தது பற்றியும், உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் மேற்படி வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், இந்த வழக்கின் எதிரிகள் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறையில் முன்பிணை பெற்றிருந்ததினால் அவர்களை கைது செய்யவில்லை என்றும், அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பூபேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றது பற்றியும், பின்பு புலன்விசாரணையை முடித்து கடந்த 21.11.2023ம் தேதி எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியமளித்திருப்பினும், இவ்வழக்கின் புகார்தாரர் விசாரிக்கப்படாத நிலையில், கண்ணுற்ற மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அரசு தரப்பு சாட்சி.1 மற்றும் 2 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளதை கருத்திற்கொண்டு, அரசு தரப்பு சாட்சி.3 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளின் குற்ற செயல் அரசு தரப்பில் நிரூபித்துள்ளதாக தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:26:25 +0530

9. முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக 1ம் எதிரியின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 294(b) ன் கீழும், 2,3 எதிரிகளின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும், 4 ஆம் எதிரியின் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 324ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்கள் வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக இரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதுகுறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:26:31 +0530

நீதித்துறை நடுவர்
சீர்காழி.

1. அரசுத் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திரு. கருணாநிதி | கண்ணுற்ற சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.2 | திரு.ஆறுமுகம் | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.3 | திரு. சோழன் | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–1/ அரசு தரப்பு சாட்சி.4 | 24.10.2023 | புகார் வாக்குமூலம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–2/ | 24.10.2023 | முதல் தகவல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.4 | | |
| அரசு தரப்பு சான்றாவணம்–3/ அரசு தரப்பு சாட்சி.4 | 24.10.2023 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–4/ அரசு தரப்பு சாட்சி.4 | 24.10.2023 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–5/ அரசு தரப்பு சாட்சி.4 | 24.10.2023 | காயச்சான்று |

3. அரசு தரப்பு சான்று பொருட்கள்: இல்லை.

4. எதிரி தரப்பு சாட்சிகள்: இல்லை.

5. எதிரி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்: இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.27 21:26:38 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

குறிப்பு

1.தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2.இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்து வருகின்றார்.
3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.